**செ. கு. எண்**: 278 **நாள்**: 10.08.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 10.8.2012

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை, வாழவந்திநாடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. N.வீராசாமி அவர்கள் 4.3.2012 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.5.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. A.மாதேஸ்வரன் அவர்கள் 17.7.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. E.இன்பராஜ் அவர்கள் 31.7.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், முத்தையாபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.பொன்இசக்கி அவர்கள் 3.8.2012 அன்று சாயர்புரம் புதுக்கோட்டை ரோடு அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சேலையூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த செல்வி P.வெற்றிச்செல்வி அவர்கள் 4.8.2012 அன்று தாம்பரம், இரும்புலியூர், G.S.T. சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்ட ஆயுதப் படை பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.மணிகண்டன் அவர்கள் 7.8.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் கடலூர் – நெல்லிக்குப்பம் சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், அரும்பாக்கம் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலாகப் பணி புரிந்து வந்த திருமதி S.மேரி கிரேஸி அவர்கள் 7.8.2012 அன்று மதுரை மாவட்டம், வளர்நகர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வீராசாமி, தலைமைக் காவலர் திரு. பொன்இசக்கி, முதல்நிலைக் காவலர்கள் திரு. இன்பராஜ், திரு. மாதேஸ்வரன், திரு. மணிகண்டன், திருமதி மேரி கிரேஸி, காவலர் செல்வி வெற்றிச்செல்வி, ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சாலை விபத்துகளில் காலமான திரு. N.வீராசாமி, K.பொன்இசக்கி, P.மணிகண்டன், S. மேரி கிரேஸி, P.வெற்றிச்செல்வி, உடல்நலக் குறைவால் காலமான திரு. A.மாதேஸ்வரன் மற்றும் மாரடைப்பால் காலமான திரு. E.இன்பராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**